www.kalviexpress.in

# அரையாண்டுப் பொதுத் தேர்வு, டிசம்பர் - 2019

**வகுப்பு 11** பதிவெண்

நேரம்: 3.00 மணி **PART - III - பொருளியல்** மொத்த மதிப்பெண்கள்: 90

**அறிவுரைகள்:** 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும். 2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பகுதி - I

குறிப்பு: **i)** அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20×1=20**

**ii)** கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) சமநிலை விலை என்பது அந்த விலையில் ..............
அ) எல்லாம் விற்கப்படுகிறது ஆ) வாங்குபவர்கள் பணத்தை செலவிடுகின்றனர்
இ) தேவையின் அளவும் அளிப்பின் அளவும் சமம் ஈ) மிகைத் தேவை பூஜ்ஜியம்

2) தேவை நெகிழ்ச்சி என்ற கருத்தை அறிமுகப்படுத்தியவர் ..............
அ) பெர்கூசன் ஆ) கீன்ஸ் இ) ஆடம் ஸ்மித் ஈ) மார்ஷல்

3) சாதாரண தரவரிசைப் பயன்பாட்டை எவ்வாறு அளவிடலாம்?
அ) தரப்படுத்துதல் ஆ) எண்ணிக்கைப்படுத்துதல்
இ) வார்த்தைப்படுத்துதல் ஈ) எதுவுமில்லை

4) காப்-டக்ளஸ் உற்பத்தி சார்பு எதனை அடிப்படையாக கொண்டது?
அ) வளர்ந்து செல் விகித விளைவு விதி ஆ) குறைந்து செல் விகித விளைவு விதி
இ) மாறா விகித விளைவு விதி ஈ) மேற்காணும் அனைத்தும்

5) முதன்மை உற்பத்திக் காரணிகளாவன
அ) உழைப்பு மற்றும் தொழிலமைப்பு ஆ) உழைப்பு மற்றும் மூலதனம்
இ) நிலம் மற்றும் மூலதனம் ஈ) நிலம் மற்றும் உழைப்பு

6) மொத்த மாறாச் செலவு 100, மொத்த மாறும் செலவு 125 எனில் மொத்தச் செலவைக் கணக்கிடுக.
அ) 125 ஆ) 175 இ) 225 ஈ) 325

7) விலையின் மற்றொரு பெயர் ..............
அ) சராசரி வருவாய் ஆ) இறுதிநிலை வருவாய் இ) மொத்த வருவாய் ஈ) சராசரி செலவு

8) ஒரு பொருள் அல்லது பணி உற்பத்தி செய்யப்படும் இடத்திலேயே பரிமாற்றம் செய்வதை .............. என்கிறோம்.
அ) உள்ளூர் அங்காடி ஆ) மாகாண அங்காடி இ) தேசிய அங்காடி ஈ) பன்னாட்டு அங்காடி

9) உழைப்பாளருக்கான வெகுமதி ..............
அ) வாடகை ஆ) கூலி இ) இலாபம் ஈ) வட்டி

10) ஜனநாயக சமதர்மத்தைக் கொண்டு வந்தவர் ..............
அ) ஜவஹர்லால் நேரு ஆ) P.C. மஹலனோபிஸ்
இ) டாக்டர். இராஜேந்திர பிரசாத் ஈ) இந்திராகாந்தி

11) திட்டமிடுதலை நம் நாட்டில் அறிமுகப்படுத்திய பெருமை ..............யேச் சாரும்.
அ) ஜவஹர்லால் நேரு ஆ) காந்திஜி இ) அம்பேத்கர் ஈ) திருவள்ளுவர்

12) முதலாம் உலகப்போர் தொடங்கப்பட்ட ஆண்டு ..............
அ) 1914 ஆ) 1814 இ) 1941 ஈ) 1841

13) பண்டங்கள் மற்றும் பணிகள் வரிச்சட்டம் .............. அமல்படுத்தப்பட்டது.
அ) 2017 ஜூலை 1-ந் தேதி ஆ) 2016 ஜூலை 1-ந் தேதி
இ) 2017 ஜனவரி 1-ந் தேதி ஈ) 2016 ஜனவரி 1-ந் தேதி

14) சுதந்திரத்திற்குப் பிந்தைய காலத்தில் ..............ம் ஆண்டு இந்திய பொருளாதாரத்தில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது.
அ) 1991 ஆ) 1995 இ 2001 ஈ) 2011

15) ஊரக ஏழ்மைக்கான காரணத்தைச் சுட்டுக.
அ) வேளாண்மை சாரா வேலையின்மை ஆ) அதிக வேலை நிலை
இ) குறைந்த பணவீக்க வீதம் ஈ) அதிக முதலீடு

16) தேசிய ஊரக நல அமைப்பு .............. ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.
அ) 12, ஏப்ரல் 2005 ஆ) 12, ஏப்ரல் 2006 இ) 12, மே 2005 ஈ) 12, மே 2006

17) சுகாதாரக் குறியீட்டில் தமிழ்நாடு எந்த மாநிலத்திற்கு மேலாக உள்ளது?
அ) கேரளா ஆ) பஞ்சாப் இ) குஜராத் ஈ) மேற்கூறிய அனைத்தும்

www.kalviexpress.in

18) இந்திய அளவில் .............. அதிக அளவு காற்று வழி மின்சாரம் தயாரிக்கும் கட்டமைப்பைக் கொண்ட மாநிலமாக உள்ளது.
அ) தமிழ்நாடு ஆ) கேரளா இ) ஆந்திரப்பிரதேசம் ஈ) கர்நாடகம்

19) .............. இவற்றின் ஒருங்கிணைப்பே கணிதவியல் பொருளாதாரம் எனப்படும்.
அ) கணிதம் மற்றும் பொருளாதாரம் ஆ) பொருளாதாரம் மற்றும் புள்ளியியல்
இ) பொருளாதாரம் மற்றும் சமன்பாடுகள் ஈ) வரைபடங்கள் மற்றும் பொருளாதாரம்

20) தேவைக்கோடும் அளிப்புக்கோடும் வெட்டும் புள்ளியே .............. ஆகும்.
அ) சமநிலை ஆ) சமன்பாடு இ) தீர்வு ஈ) மாறிலி

## பகுதி - II

**7×2=14**

குறிப்பு: **ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

21) நுண் பொருளியல் என்றால் என்ன?
22) விலைத் தேவை நெகிழ்ச்சியின் அளவை விவரி.
23) வருவாயை - வரையறுக்கவும்.

www.kalviexpress.in

24) விலையை ஏற்பவர் யார்?
25) வாரம் - வரையறுக்கவும்.
26) முன்னேறிய பொருளாதாரத்தின் இரண்டு இயல்புகளை கூறுக.
27) ஜமீன்தாரி முறையினை வரையறுக்கவும்.
28) இந்திய பொருளாதாரத்தில் கட்டமைப்பு சீர்திருத்தத்தை செயல்படுத்த காரணம் என்ன?
29) ஊரக வறுமைக்கான காரணங்கள் ஏவையேனும் மூன்றினை எழுதுக.
30) Word Document-ஐ திறப்பது எப்படி?

## பகுதி - III

**7×3=21**

குறிப்பு: **ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

31) இயல்புரை பொருளியல் மற்றும் நெறியுரை பொருளியலை ஒப்பிடுக.
32) தேவை விரிவு மற்றும் சுருக்கத்தை வேறுபடுத்துக.
33) அளிப்பு நெகிழ்ச்சியை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை?
34) AC மற்றும் MC-க்கும் இடையேயான தொடர்பினை விவரிக்கவும்.
35) நிறுவனம் மற்றும் தொழிற்சாலைக்கு இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?
36) கூலியின் வகைகளைப் பட்டியலிடுக.
37) வேளாண்மை பொருளாதாரம் பற்றி அம்பேத்கரின் பொருளாதார கருத்துக்களை கூறுக.
38) பசுமைப்புரட்சியின் பலவீனங்கள் ஏதேனும் மூன்றினை விவரிக்கவும்.
39) வறுமை ஒழிப்புத் திட்டங்களை பட்டியலிடுக.
40) தமிழ்நாட்டின் போக்குவரத்துத் துறைகளின் வகைகளை விவரிக்கவும்.

## பகுதி - IV

**7×5=35**

குறிப்பு: **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

41) அ) பொருளியலில் பகுத்தாய்வு மற்றும் தொகுத்தாய்வு முறைகளின் படிகளை விளக்குக. **(அல்லது)**
ஆ) பொருளியலின் வகைகளை விவரிக்கவும்.

42) அ) தேவை நெகிழ்ச்சியை அளவிடும் முறைகள் யாவை? **(அல்லது)**
ஆ) அளிப்பு விதியை அளிப்பு கோட்டுடன் விவரிக்கவும்.

43) அ) விகித அளவு விளைவு விதியை உதாரணத்துடன் விளக்குக. **(அல்லது)**
ஆ) நிறைவுப் போட்டியில் எவ்வாறு விலை மற்றும் உற்பத்தி அளவு தீர்மானிக்கப்படுகிறது?

44) அ) நிறுவனம் மற்றும் குழுக்களின் நீண்டகால சமநிலை மற்றும் முழுச்சமநிலையை வரைபடத்துடன் விவரிக்கவும். **(அல்லது)**
ஆ) கீன்சின் வட்டிக் கோட்பாட்டை விவரிக்கவும்.

45) அ) இந்தியாவின் உடல்நலனை விவரிக்கவும். **(அல்லது)**
ஆ) இந்தியாவின் 12-வது ஐந்தாண்டுத் திட்டங்களின் செயல்பாடுகளை விவரிக்கவும்.

46) அ) 2015-2020-ம் ஆண்டிற்கான ஏற்றுமதி இறக்குமதி கொள்கையின் சிறப்பியல்புகளை விளக்குக. **(அல்லது)**
ஆ) தமிழ்நாட்டின் தலா வருமானத்தை பிற நாடுகளுடன் ஒப்பிடுக.

47) அ) தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு வகையான ஆற்றல் வளங்களை விவரிக்கவும். **(அல்லது)**
ஆ) $7x_1-x_2-x_3 = 0$; $10x_1-2x_2+x_3 = 8$; $6x_1+3x_2-2x_3 = 7$ என்ற சமன்பாடுகளின் தீர்வு காண்க.

********

www.kalviexpress.in